

# IWAY (ஐவே)

## ஸ்டாண்டர்டு

இந்த ஆவணம், IWAY(ஐவே) செந்தரப் பொதுப்பகுதி, பதிப்பு **6.0.**-ரின் மொழிபெயர்ப்பு. இந்த மொழிபெயர்ப்பு பொது அறிவிப்பிற்காக மட்டுமே, ஆகையால், இதை ஒப்பந்த படிவமாக கருதக்கூடாது. தகராறுகள் மற்றும் பொருள் புரிதலில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் காலங்களில், இதன் ஆங்கில மூலவடிவம் ஒன்றுதான் மேற்கோளாக எடுத்துக்கொள்ள உகந்த ஆவணமாகும்.

**தயாரிப்புகள், சேவைகள், மெட்டீரியல்கள் மற்றும் கூறுகளைப் பொறுப்புடன் வாங்குவதற்கான *IKEA (ஐக்கியா)* வழி**

IWAY (ஐவே) ஸ்டாண்டர்டு EDITIONS 6.0 PUBLISHED SEPTEMBER 2019 Inter IKEA Systems B.V. 2019
(இன்டர் ஐக்கியா சிஸ்டம்ஸ் பி.வி. 2019)

IKEA



# உள்ளடக்கங்கள்


முன்னுரை p. 3

IWAY (ஐவே) கொள்கைகள் p. 9

பொதுப் பிரிவு p. 10
*(அனைத்து சப்ளையர்களுக்குமான தேவைகள்)*

கூடுதல் பிரிவு
*சப்ளையர்களுக்கான குறிப்பிட்ட தேவைகள் தனி ஆவணத்தில் உள்ளன)*

- குடியிருப்புப் பிரிவு
- விலங்குநலவாழ்வுப் பிரிவு
- வனவியல் பிரிவு
- போக்குவரத்துப் பிரிவு



# சிறந்த அன்றாட வாழ்க்கையை பல மக்களுக்கு உருவாக்கி கொடுப்பதே

**இந்த ஆவணத்தில் “நாம்” என்பது IKEA (ஐக்கியா) பிராண்டின் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களையும், “நீங்கள்” என்பது எந்தவொரு IKEA (ஐக்கியா) நிறுவனத்தின் எந்தவொரு*சப்ளையர்*களையும் குறிக்கின்றது.**

**எங்களது நோக்கத்தைப் பகிரும் *சப்ளையர்*கள், சேவை வழங்குபவர்கள் மற்றும் இதர ஒப்பந்ததாரர்கள் (இனிமேல் “*சப்ளையர்*கள்” என்று அழைக்கப்படுவர்) ஆகியவர்களுடன் நீண்ட கால உறவை கட்டமைக்கவே நாங்கள் (“IKEA (ஐக்கியா)”) விரும்புகிறோம்.  இதற்காக நாங்கள் IWAY (ஐவே) ஐ உருவாக்கியுள்ளோம். தயாரிப்புகள், சேவைகள், மெட்டீரியல்கள் மற்றும் கூறுகளை பொறுப்புடன் வாங்குவதற்கான IKEA (ஐக்கியா) வழி.**

மக்கள், நாம் வாழும் பூமி மற்றும் விலங்குகளின்மீது அக்கறை செலுத்தும்போது, IKEA (ஐக்கியா) வேல்யூ செயினில்சப்ளையராக உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதை IWAY (ஐவே)வரையறுக்கிறது.

IWAY (ஐவே) உடன் பணியாற்றும் எங்கள் அனுபவமானது, மக்களும் பூமியும் விலங்குகளும் மரியாதையுடன் நடத்தப்படும் போது, பணியாளர்கள் அதிக உற்பத்தியை வழங்குகின்றனர், வளங்கள் மிகவும் பயனுள்ள வகையில் உபயோகிக்கப்படுகின்றன மற்றும் வணிகம் முன்னேற்றமடைகிறது என்பதை எங்களுக்குக் காட்டின. எங்கள் வாடிக்கையாளர்களும் பலனடைகின்றனர் - அதாவது IKEA (ஐக்கியா) விற்கும் எல்லாப் பொருட்களும் பொறுப்புடன் உற்பத்திசெய்யப்படுகின்றன, டிரான்ஸ்போர்ட் செய்யப்படுகின்றன, வழங்கப்படுகின்றன மற்றும் இணைக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்கின்றனர், மேலும் எங்கள் ஸ்டோர்களின் *சப்ளையர்*கள், வாடிக்கையாளர் பிராண்டைத் தொடர்புகொண்ட வழிகள் (கஸ்டமர் டச்பாயிண்ட்டுகள்) மற்றும் உற்பத்தித் தளங்கள் ஆகியவை நல்லதொரு சமூக, சுற்றுச்சூழல் மற்றும் விலங்குகள் நலம்பேணும் சூழல்களைப் பராமரிக்கின்றன.

IWAY (ஐவே) உடன் சேர்ந்து பணியாற்றும்போது, பின்வரும் கேள்விகளால் நாங்கள் தொடர்ந்து வழிநடத்தப்படுகின்றோம்:



குழந்தையின் நலனுக்கு உகந்தது எது?



அது சுற்றுச்சூழலில் நேர்மறை தாக்கத்தைக் கொண்டிருக்குமா?



பணியாளரின் சிறந்த ஆர்வம் எது?



விலங்குகள் நலனுக்கு உகந்தது எது?

# IKEA (ஐக்கியா) வேல்யூ செயினின் அனைத்து படிநிலைகளிலும் பொறுப்புள்ள கொள்முதல் கொள்கைகளை ஆதரிக்க நாங்கள் உறுதியாக இருக்கிறோம்

IWAY (ஐவே) ஐப் பூர்த்திசெய்வதன் மூலம், பின்வருவனவற்றை நீங்கள் பாதுகாப்பீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

**பொறுப்பு**
உள்ளூர், தேசியம் மற்றும் சர்வதேச சட்டங்களுடன், IWAY (ஐவே) ஸ்டாண்டர்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து IWAY (ஐவே) கண்டிப்பான தேவைகள் மற்றும் IWAY (ஐவே) அடிப்படை தேவைகளுக்கு எல்லா நேரங்களிலும் இணங்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

**திறந்த மனப்பான்மை**
முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளில் நீங்கள் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும்.

**தொடர்ச்சியான முன்னேற்றம்**
IWAY (ஐவே) ஸ்டாண்டர்டைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நேரம் மற்றும் உழைப்பை அடையாளம் கண்டுள்ளோம், மேலும் செயல்திறனை வலுவாக்குவதற்கும், தேவைப்படும் IWAY (ஐவே) அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் தொடர்ச்சியான முன்னேற்றம் அளிக்கும் மனநிலையை நீங்கள் மேற்கொள்வதற்கு உங்களை ஊக்கப்படுத்துகிறோம்.



# எங்களுடைய செயல்பாடுகள் ஒரு மாற்றத்தை உருவாக்குகிறது என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்

நாங்கள் உங்களுடன் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதற்கு நியாயமான மற்றும் திறந்த அணுகுமுறையை எடுக்க முயற்சி செய்கிறோம். இதற்கான அர்த்தம் பின்வருமாறு:

**சீரமைப்பு**
நாங்கள் உங்களிடம் கோருவது போலவே எங்களின் பணியிடத்திலும் அதே எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

**தகவல் தொடர்பு**
எங்களுடைய *சப்ளையர்*களுடன் மற்றும் எங்களது செயல்பாடு மற்றும் நடத்தை குறித்த உங்களது கருத்துகளை வரவேற்கிறோம்.

**ஆதரவு**
சாத்தியமான இடங்களில் எல்லாம், உங்கள் சொந்த செயல்முறைகளை மேம்படுத்துவதற்கு உங்களுக்கு உதவவும், உங்கள் செயல்பாடுகளைச் சரிபடுத்துவதற்கும், IWAY (ஐவே) ஸ்டாண்டர்டைப் பூர்த்திசெய்து, அதற்கு இணங்கி தொடர்ந்து முன்னேறுவதற்கும் உங்களுக்கு ஆதரவு அளிக்கிறோம்.



# அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரநிலைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் IWAY (ஐவே) யின் கொள்கைகள் மற்றும் தேவைகள் உள்ளன

UN குளோபல் காம்பாக்ட்டின் பத்து கொள்கைகளின் அடிப்படையில் வணிகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான (UNGPs) UN வழிகாட்டுதல் கொள்கைகளுக்கான எங்கள் கடமையை இவை பிரதிபலிக்கின்றன. எங்களது தேவைகளை மேம்படுத்தும்போது, நாங்கள் எதிர்கால வேலை மற்றும் பலவற்றுக்காக UN சஸ்டைன்னபிள் டெவெலப்மெண்ட் கோல்ஸ் (SDGs) மற்றும் ILO சென்டெனரி டிக்ளரேஷன் ஆகியவற்றாலும் வழிநடத்தப்படுகிறோம்.

இவற்றிற்கு ஏற்றவாறு IWAY (ஐவே) கட்டமைக்கப்பட்டுள்ளது:

**கொள்கைகள்**

தயாரிப்புகள், சேவைகள், மெட்டீரியல்கள் மற்றும் கூறுகளைப் பொறுப்புடன் வாங்குவது தொடர்பான IKEA (ஐக்கியா) யின் நிலைபாட்டினை இக்கொள்கைகள் விளக்குகின்றன

**பிரிவுகள்**

IWAY (ஐவே)யின் தேவைகளை இப்பிரிவுகள் ஒன்றிணைக்கிறது, மேலும் இப்பிரிவுகள் *சப்ளையர்*களின் செயல்பாடுகள் மற்றும் அமைப்பிற்கு ஏற்ப பொருந்தும்.

**IWAY (ஐவே) தேவைகள்**

**கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)**

வணிகம் செய்யும் போது அனைத்து நேரங்களிலும் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்.

**அடிப்படை (BASIC)**

முதல் டெலிவரி அல்லது சேவையின் 12 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்.

**மேம்பட்டவை (ADVANCED)**

குறைந்தபட்ச இணக்கத்தை தாண்டிய மற்றும் நிலையான நடைமுறைகளை நோக்கிய கூடுதல் படிகளை வரையறுக்கிற தேவைகள்.
தொடர்புடைய IKEA (ஐக்கியா) அமைப்பு நிர்ணயித்த முன்னுரிமைகளைப் பொறுத்து இவை பொருந்தக்கூடும் அல்லது பொருந்தாமல் இருக்கக்கூடும்.

**மிகச்சிறந்தவை (EXCELLENT)**

குறைந்தபட்ச இணக்கத்தை தாண்டிய மற்றும் நிலையான நடைமுறைகளை நோக்கிய கூடுதல் படிகளை வரையறுக்கிற தேவைகள்.
தொடர்புடைய IKEA (ஐக்கியா) அமைப்பு நிர்ணயித்த முன்னுரிமைகளைப் பொறுத்து இவை பொருந்தக்கூடும் அல்லது பொருந்தாமல் இருக்கக்கூடும்.

மிகவும் கோரக்கூடிய தேவைகள் என்பது எப்போதும் இணங்கக்கூடிய சட்டபூர்வமான அல்லது IWAY (ஐவே) தேவைகள் ஆகும். பொருந்தக்கூடிய சட்டங்கள் அல்லது விதிமுறைகளுக்கு முரணாக IWAY (ஐவே) தேவைகள் இருந்தால், சட்டப்படியே இணங்க வேண்டும் மற்றும் சட்டமே மேலோங்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில், IKEA (ஐக்கியாவிற்கு) உடனடியாக தெரிவிக்கப்படும் மற்றும் IWAY (ஐவே) தேவைகளை மதிக்க வேறு வழிகள் ஆராயப்படும்.

**தேவைகள் மற்றும் வேலை செய்யும் வழிகளுக்கு ஒரேமாதிரியான விதிமுறைகளை வகுத்து தருவதற்கான ஒத்திசைவு முயற்சிகளை ஊக்குவிக்கிறோம்**
*சப்ளையர்*கள் சொந்த நடத்தை விதியை வைத்திருக்கலாம், வேறொரு வாங்குபவரின் நடத்தை விதியுடன் செயல்படலாம் அல்லது IWAY (ஐவே) உடன் ஒப்பிடக்கூடிய நிலைத்தன்மை திட்டத்தின்படி பெறப்பட்ட சான்றிதழுடன் செயல்படலாம் என IKEA (ஐக்கியா) ஒப்புதல் அளிக்கிறது. IWAY (ஐவே) தேவைகளை மாற்று அணுகுமுறையுடன் செயல்படுத்துவதை IKEA (ஐக்கியா) ஆதரிக்கிறது. இவ்வாறான அணுகுமுறைகள் இணையானதா இல்லையா என்பதை முடிவு செய்வது IKEA (ஐக்கியா)யின் உரிமையாகும்

**IWAY (ஐவே)யை வெற்றிகரமாக செயல்படுத்துவது என்பது ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றைச் சார்ந்தது**
உங்களிடமிருந்து பெறப்பட்ட பதிவுகள், விவாதங்கள் மற்றும் தகவல்கள் ஆகியவை IKEA (ஐக்கியா) அல்லது அதன் சக ஊழியர்கள் அல்லது IKEA (ஐக்கியாவினால்) நியமிக்கப்பட்ட மூன்றாவது நிறுவனத்தினால் ரகசியமாக பாதுகாக்கப்படும். IWAY (ஐவே) தொடர்பாக பெறப்பட்ட எந்தத் தரவும் மரியாதையுடன் கருதப்படும் மற்றும் IWAY (ஐவே)யின் இணக்கத்திற்காக மட்டுமே சரிபார்க்கப்படும்.

**IWAY (ஐவே) ஸ்டாண்டர்டின் அதிகாரப்பூர்வ மொழி ஆங்கிலமாகும்**
IWAY (ஐவே) ஸ்டாண்டர்டின் மொழிபெயர்ப்புகள், தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் அது ஒப்பந்த ஆவணமாக நம்பப்படாது. ஆங்கிலப் பதிப்பு மட்டுமே ஒப்பந்த ஆவணமாகும், மேலும் தெளிவற்ற தன்மைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் ஆங்கிலப் பதிப்பே கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்விளக்கம்**
சாய்வு வார்த்தைகள் பொருள்விளக்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன



# IWAY (ஐவே) கொள்கைகள்

**1**

IWAY (ஐவே) கொள்கைகள் செயல்திறனுடைய வழக்கங்கள்மற்றும் வெளிப்படையான உரையாடல் ஆகியவற்றை ஆதரிக்கின்றன

**2**

வணிகம் சட்டப்படியும் நேர்மையுடனும் நடத்தப்படுகிறது

**3**

குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றனர், மேலும் கற்றல் வாய்ப்புகளும் குடும்ப வாழ்க்கையும் முன்னிறுத்தப்படுகின்றன

**4**

பணியாளர்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படுகின்றன

**5**

பணியாளர்களுக்கு விடுப்பு எடுப்பதற்கான உரிமை, அவரவர் தகுதிகேற்ற ஊதியம் மற்றும் திறனை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன.

**6**

பணியாளர்களின்' ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மதிக்கப்படுகின்றன

**7**

வேலைசெய்தல் மற்றும் வாழ்விற்கான பிற சூழ்நிலைகள் பொருத்தமாக உள்ளன

**8**

நாம் வாழும் பூமி பாதுகாக்கப்படுகின்றது

**9**

நீர் மற்றும் கழிவுகள் உள்ளிட்ட வளங்கள் தக்கவைக்கக் கூடிய வகையில் உள்ளது

**10**

விலங்குகள் நல்ல வாழ்க்கையை வாழ்கின்றன



# IWAY (ஐவே) ஸ்டாண்டர்டு
# பொதுப் பிரிவு

*அனைத்து சப்ளையர்களுக்கும் பொருந்தும்*

இந்த ஆவணம், IWAY(ஐவே) செந்தரப் பொதுப்பகுதி, பதிப்பு 6.0.-ரின் மொழிபெயர்ப்பு. இந்த மொழிபெயர்ப்பு பொது அறிவிப்பிற்காக மட்டுமே, ஆகையால், இதை ஒப்பந்த படிவமாக கருதக்கூடாது. தகராறுகள் மற்றும் பொருள் புரிதலில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் காலங்களில், இதன் ஆங்கில மூலவடிவம் ஒன்றுதான் மேற்கோளாக எடுத்துக்கொள்ள உகந்த ஆவணமாகும்.

**EDITION 6.0 PUBLISHED SEPTEMBER 2019 - © Inter IKEA Systems B.V. 2019**
**(இன்டர் ஐக்கியா சிஸ்டம்ஸ் பி.வி. 2019)**

IKEA

# 1 IWAY (ஐவே) கொள்கைகள் பயனுள்ள *நடைமுறைகள்* மற்றும் திறந்த தகவல் டர்புகளால் ஆதரிக்கப்படுகின்றன

## செயல்திறன் மேலாண்மை

அடிப்படை (BASIC)

G 1.1 IWAY (ஐவே) தொடர்பான பொறுப்பு மற்றும் கடமைகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிர்வாக பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

G 1.2 IWAY (ஐவே) தேவைகள் தொடர்பான இணங்குதலை மதிப்பீடு செய்ய குறைந்தது 12 மாதத்திற்கு ஒரு முறை உள் தணிக்கை செயல்பாடு நடத்தப்படுகிறது.

மேம்பட்டவை (ADVANCED)

G 1.3 எழுத்துப்பூர்வமான கொள்கைகளும் வழக்கங்களும் IWAY (ஐவே) யை சரியான இடத்தில் வைக்கின்றன.

G 1.4 IWAY (ஐவே) தொடர்பான செயல்திறனை அளவிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் குறிகாட்டிகள் மற்றும் திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

## சப்ளை செயின் மேலாண்மை

அடிப்படை (BASIC)

G 1.5 IKEA (ஐக்கியா) வேல்யூ செயினில் உள்ள தயாரிப்புகள், சேவைகள், மெட்டீரியல்கள் அல்லது கூறுகளின் துணை ஒப்பந்ததாரர்கள் IKEA (ஐக்கியா) அமைப்பு விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப தொடர்புபடுத்தப்படுகிறது.

G 1.6 IKEA (ஐக்கியா) அமைப்பு விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப IKEA (ஐக்கியா) வேல்யூ செயினில் உள்ள தயாரிப்புகள், சேவைகள், மெட்டீரியல்கள் அல்லது கூறுகளின் துணை ஒப்பந்ததாரர்களிடம் IWAY (ஐவே) செயல்படுத்தப்பட்டு சரிபார்க்கப்படுகிறது.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 1.7 IKEA (ஐக்கியா) வேல்யூ செயினில் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## தொழிலாளர்/நிர்வாகம் தகவல்தொடர்புகள்

அடிப்படை (BASIC)

G 1.8 பணியாளர்கள் IWAY (ஐவே) தொடர்பான தங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தெரிவிக்கப்படுகிறார்கள்.

G 1.9 IWAY (ஐவே) தொடர்பாக, பணியாளர்களுடன் கட்டமைக்கப்பட்ட தகவல் தொடர்புகள் மேற்கொள்ளப்படுகிறது.



# 2 வணிகம் சட்டப்படியும் நேர்மையுடனும் நடத்தப்படுகிறது

**பிசினஸ் நெறிமுறைகள்**

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 2.1 IKEA (ஐக்கியா) வணிகம் தொடர்பான நம்பிக்கையும் வெளிப்படைத்தன்மையும் உறுதி செய்யப்படுகிறது சட்டத்தை மீறுதல், பொய் ஆவணங்களைப் பயன்படுத்துதல், ஏமாற்றுதல் அல்லது ஊழல் செய்தல் முதலிய முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அடிப்படை (BASIC)

G 2.2 IWAY (ஐவே) தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் அனுமதிகளுடன் இணங்கப்படுகின்றன.

# 3 குழந்தைகள், பாதுகாக்கப்படுகின்றனர் மேலும் பணி & கற்றல் வாய்ப்புகளும் குடும்ப வாழ்க்கையும் முன்னிறுத்தப்படுகின்றன

## குழந்தைகளின் பாதுகாப்பு

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 3.1 குழந்தைத் தொழிலாளர் இல்லை குழந்தைத் தொழிலாளர் இருப்பதாகச் சாத்தியம் இருப்பின், அது உடனடியாக IKEA (ஐக்கியா) க்குத் தெரிவிக்கப்படும்.

அடிப்படை (BASIC)

G 3.2 *குழந்தைகள்* சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட வயதிற்கு கீழுள்ள வேலை செய்வதில்லை. தொழிற்பயிற்சி பெறுபவர்கள் 14 வயதிலிருந்து பயிற்சியில் பங்கேற்கலாம் பயிற்சி அவர்களின் கல்வி தொடர்பானது ஆகும்.

G 3.3 *குழந்தைகள்* இளம் தொழிலாளர்களாகவோ தொழிற்பயிற்சி பெறுபவர்களாகவோ இருந்தாலும் *அபாயகரமான வேலையையோ* இரவு வேலையையோ செய்ய மாட்டார்கள்.

## வேலை மற்றும் கற்றலுக்கான வாய்ப்புகள்

அடிப்படை (BASIC)

G 3.4 இளம் தொழிலாளர்களுக்கான பணி வாய்ப்புகள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

மேம்பட்டவை (ADVANCED)

G 3.5 குழந்தைகளுக்கான தொழிற்பயிற்சி வாய்ப்புகள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

## குடும்ப வாழ்க்கைக்கான வாய்ப்புகள்

| | | மேம்பட்டவை (ADVANCED) |
|---|---|---|

G 3.6 பணியாளர்கள் பொருந்தக்கூடிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டவற்றுடன் சேர்த்து, குழந்தை பராமரிப்புக்கான ஆதரவையும் கூடுதலாகப் பெறுவர்.



# 4 பணியாளரின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படுகின்றன

### *பணியாளர் சுதந்திரம்*

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 4.1 விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல், கொத்தடிமை அல்லது சிறைச்சாலை உழைப்பு ஆகியவை இல்லை. .  விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல், கொத்தடிமை அல்லது சிறைச்சாலை உழைப்பு ஆகியவை இருப்பதாக ஏதேனும் சாத்தியமிக்க அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நிலை இருந்தால், உடனடியாக IKEA (ஐக்கியாவிற்குத்) தெரிவிக்கப்படும்.

அடிப்படை (BASIC)

G 4.2 கூடுதல் நேரம் வேலைசெய்வது என்பது தன்னார்வம் சார்ந்ததாகும், மேலும் கூடுதல் நேரம் வேலைசெய்ய மறுக்கும் பணியாளர்களுக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படாது. பொருந்தும் சட்டத்தின் படி தெளிவாக வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ், *பணியாளர்* பிரதிநிதி மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில், பொருந்தும் இடங்களில் சிறிது நேரத்திற்கு கூடுதல் நேரம் வேலை செய்வது கட்டாயமாக இருக்கலாம்.

### அசோசியேஷனின் சுதந்திரம் மற்றும் குறைதீர்த்தல்

அடிப்படை (BASIC)

G 4.3 பணியாளர்கள் பணி தொடர்பான அமைப்புகளை உருவாக்குவதற்கான அல்லது அதில் பங்கேற்பதற்கான (அல்லது பங்கேற்காமல் இருப்பதற்கான) மற்றும் பொதுக்கூட்டுப்பேரத்தில் ஈடுபடுவதற்கான தங்களின் உரிமையைத் தயக்கமின்றி பயன்படுத்தலாம். உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ *பாகுபாடு* காட்டுவார்களா, வன்முறையில் ஈடுபடுவார்களா அல்லது தொந்தரவு அளிப்பார்களா என எந்தப் பயமின்றியும் இந்த உரிமைகளைப் பயன்படுத்தலாம்.

G 4.4 குறைதீர்க்கும் அமைப்பானது எப்போதும் தயாராகவே இருக்கும் மற்றும் இது பணியாளர்களுக்குத் தெரிந்த விஷயமாகும், இங்கே எதிர்தாக்குதல் இல்லாமல் பணியாளர்கள் தங்களின் புகார்கள் அல்லது பிரச்சனைகளைப் பதிவுசெய்யலாம். புகார்கள் பதிவுசெய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும், அத்துடன் பணியாளர்கள் குறித்த விவரங்கள் பாதுகாக்கப்படும்.

## பணியமர்த்தல் மற்றும் வேலைவாய்ப்பு

அடிப்படை (BASIC)

G 4.5 பணியமர்த்தல், வேலைவாய்ப்பு அல்லது *பணிநீக்கம்* தொடர்பான கட்டணங்களும் செலவுகளும் பணியாளர்களிடமிருந்து வசூலிக்கப்படாது. பணம் டெபாசிட் செய்யும்படி பணியாளர்களிடம் கேட்கப்படாது.

G 4.6 பணியமர்த்தல் தொடர்பாக எழுதப்பட்ட நடைமுறையானது செயல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் பின்வருபவை தொடர்பான விதிகள் உள்ளடங்கும்: வயது சரிபார்ப்பு, பணியாளர்களைத் தகுதிகாண் சோதனை செய்வது, தேர்ந்தெடுப்பது, மேலும் பணியாளரைப் பணிக்கு எடுப்பவர்களின் பயன்பாடு ஆகியவை.

G 4.7 பணியாளர்கள்தாங்கள் பணியைத் தொடங்குவதற்கு அல்லது அறிமுகப் பயிற்சி இவற்றில் எது முதலில் வருகிறதோ அதற்கு முன்பாக எழுத்துப்பூர்வமான பணி ஒப்பந்தம் அல்லது அதற்குச் சமமான ஆவணத்தில் கையொப்பமிடுகிறார்கள். பணியாளர்கள் கையொப்பமிடும் முன்னர் ஒப்பந்தத்தின் ஒரு நகலைப் பெற்று, அதில் எழுதப்பட்டுள்ளதைப் புரிந்துகொள்ள வேண்டும். வேலைவாய்ப்பு விதிமுறைகளில் ஏற்படும் முக்கியமான மாற்றங்கள், எழுத்துவடிவில் பணியாளரால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

G 4.8 ஜீரோ-அவர்ஸ் ஒப்பந்தங்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

G 4.9 *பாகுபாடு*, தொந்தரவு அளித்தல், *வணிக அறநெறி*, ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் ஆல்கஹால் & போதைப்பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்பான விதிகள் எழுத்துவடிவில் உள்ளன, அவை செயலாக்கப்பட்டு, பணியாளர்களிடத்தில் தெரிவிக்கப்படுகின்றன.

G 4.10 உடல்சார் தண்டனைகள், வன்முறை அச்சுறுத்தல்கள், பொது எச்சரிக்கைகள் அல்லது தண்டனைகள், அபராதங்கள் மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள பலன்களை அகற்றுதல் ஆகியவை உட்பட மனநலம் அல்லது உடல்நல அச்சுறுத்தல்களை உபயோகிப்பது ஒழுங்கு நடவடிக்கைகளில் சேர்க்கப்படாது. பணியாளர்கள் உதவியை நாடலாம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிரான முடிவுகளுக்கு மேல்முறையீடு செய்ய உரிமையைக் கொண்டுள்ளனர்.

மேம்பட்டவை (ADVANCED)

G 4.11 பணியானது வழக்கமாக வருவதாக இல்லாமல் இருக்கும்பட்சத்தில், *தற்காலிக வேலை* வழங்குவது பயன்படுத்தப்படும்.

G 4.12 *பணிநீக்கம்* செய்யப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்னர் பணியாளர்களுக்கு குறைந்தது 10 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படும்.

## தொடர்பான *நடைமுறைகள் சமத்துவம்*, வேற்றுமை மற்றும் *சேர்ப்பு*

அடிப்படை (BASIC)

G 4.13 உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ *பாகுபாடு*, வன்முறை அல்லது தொந்தரவு ஆகியவற்றுக்கு பணியாளர்கள் உட்படுத்தப்படமாட்டார்கள்.

மேம்பட்டவை (ADVANCED)

G 4.14 *சமத்துவம்*, வேற்றுமை மற்றும் சேர்ப்பை முன்னிறுத்தும் செயல்பாடுகள் செயலாக்கப்பட்டு, நிறுவனத்துக்குள் உள்ளவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 4.15 பாலின அடிப்படையில் ஊதியம் செலுத்துவது மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

G 4.16 மேலாளர் பதவிகளுக்கான *பாலின சமநிலை* எட்டப்பட்டுள்ளது.

# 5 *பணியாளர்கள்* விடுப்பு எடுப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர், அவரவர் தகுதிகேற்ற ஊதியம் வழங்கப்படுகின்றன மற்றும் திறனை வளர்ப்பதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர்

## வேலை நேரமும் விடுமுறை எடுத்தலும்

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 5.1 எல்லாப் பணியாளர்களின் கூடுதல் நேரம் உட்பட வேலை நேரத்தை பதிவுசெய்வதற்கான நம்பத்தகுந்த அமைப்புமுறை பராமரிக்கப்படுகிறது.

அடிப்படை (BASIC)

G 5.2 வேலை நேரமானது ஒரு வாரத்திற்கு 60 மணிநேரத்தைத் தாண்டக்கூடாது, இதில் கூடுதல்நேரமும் அடங்கும்.

G 5.3 *பணியாளர்* பிரதிநிதி மூலமாக எழுத்துபூர்வ ஆவணத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட சமயம் தவிர்த்து, ஒவ்வொரு முறை 4.5 மணிநேரம் வேலை பார்த்த பின்னர் குறைந்தது 30 நிமிடங்கள் பணியாளர்களுக்கு இடைவெளி வழங்கப்படுகிறது.

G 5.4 6 நாட்கள் வேலை பார்த்த பின்னர்,பணியாளர்கள் ஓய்வெடுக்க குறைந்தது தொடர்ச்சியாக 24 மணிநேரம் கிடைக்கும்.

மேம்பட்டவை (ADVANCED)

G 5.5 பொருந்தும் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டுள்ளதுடன் சேர்த்து, தனிப்பட்ட சூழ்நிலைகளுக்காக பணியிலிருந்து விடுப்பு எடுப்பதற்கான வாய்ப்பு பணியாளர்களுக்கு உள்ளது.

G 5.6 வழக்கமான பணி நேரங்கள் ஒரு வாரத்தில் 48 மணிநேரத்தை விட அதிகமாக இருக்காது. கூடுதல் வேலை நேரமானது ஒருவாரத்திற்கு 12 மணிநேரத்தைத் தாண்டக்கூடாது.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 5.7 கூடுதல்நேரம் வேலை செய்யாமல் இருக்கும் வழியில் பணியானது திட்டமிடப்பட்டிருக்கும்.

## ஊதியமும் நலன்களும்

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 5.8 பணியாளர்களுக்கு குறைந்தது சட்டரீதியிலான குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகிறது.

அடிப்படை (BASIC)

G 5.9 பணியாளர்கள் தங்களின் வாழ்விடத்திலிருந்து பயணித்து வந்து வேலை செய்வதால், கூடுதல் வாழ்க்கை செலவுகளுக்கான பணம் வழங்கப்படுகிறது.

G 5.10 ஒப்பந்த விதிமுறைகளின்படி, உரிய நேரத்திற்கு குறைந்தது மாதந்தோறும் ஊதியம் வழங்கப்படுகிறது.

G 5.11 முழு ஊதியம், பலன்கள் மற்றும் பணியாளர்கள் பெறும் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை பற்றிய தகவல் அடங்கிய ஊதியச்சீட்டைப் பணியாளர்கள் பெறுவார்கள். ஊதியச்சீட்டில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பணியாளர்களுக்குப் புரியும்படி இருக்கும்.

G 5.12 தேவைப்படும் போது சீருடைகள் போதுமான எண்ணிக்கையில் வழங்கப்படுகின்றன, அதுவும் இலவசமாக. சீருடைகளைச் சுத்தம் செய்ய மற்றும்/அல்லது பராமரிப்பதற்காக ஊதியத்திலிருந்து பிடித்தம் எதுவும் செய்யப்படுவதில்லை.

மேம்பட்டவை (ADVANCED)

G 5.13 கூடுதல் நேரத்திற்கான ஊதியமானது வழக்கமான ஊதியத்துடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படுகிறது அல்லது அதற்குச் சமமான விடுப்பாக வழங்கப்படுகிறது.

## திறனை வளர்த்தல்

அடிப்படை (BASIC)

G 5.14 அவசரச் சூழல்களை எப்படிக் கையாளுவது என்பது குறித்த திறனைப் பணியாளர்கள் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களின் பணியைச் செயல்படுத்தும் முன் அவர்களின் பதவியுடன் தொடர்புடைய ஆபத்துகளைத் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

G 5.15 பணியாளர்கள் தங்களின் பணியை நிறைவுசெய்யும்பொருட்டு பயிற்சி அல்லது பிற திறன் வளர்ப்பு செயல்பாடுகளைப் பெறுவார்கள்.

G 5.16 18 வயதுக்கு மேற்பட்ட தொழிற்பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியின்போது செய்யும் பணிக்காக ஊதியம் பெறுவார்கள். பயிற்சியானது அவர்களின் கல்வியுடன் தொடர்புடையதாக இருக்கும்.

மேம்பட்டவை (ADVANCED)

G 5.17 தொழிற்பயிற்சி வாய்ப்புகளானவை அடையாளங்காணப்பட்டு, முன்னிறுத்தப்படுகின்றன.

G 5.18 தங்களின் தற்போதைய பணியுடன் தொடர்புடைய அல்லது தொடர்பற்ற பகுதிகளில் தங்களின் திறனை வளர்ப்பதற்கான வாய்ப்பு பணியாளர்களுக்கு உள்ளது.

# 6 பணியாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பாதுகாக்கப்பட்டுள்ளன

## தொழில் சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 6.1 தீவிர தொழில்சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களுக்குப் பணியாளர்கள் ஆளாவதில்லை. உயிரிழப்புகள் உடனடியாக IKEA (ஐக்கியாவிற்குத்) தெரிவிக்கப்படுகின்றன.

G 6.2 எல்லாப் பணியாளர்களுக்கும் *விபத்து*க் காப்பீடு வழங்கப்படுகின்றது. பணி தொடர்பான காயங்கள் மற்றும் உடல்நலக் குறைவிற்கான மருத்துவச் சிகிச்சையானது காப்பீட்டில் உள்ளடங்குகிறது மற்றும் நிரந்தர ஊனத்தால் ஏற்படும் பணி சார்ந்த காயங்கள் மற்றும் உடல்நலக் குறைவு அல்லது மரணத் திற்கு இழப்பீடு வழங்கப்படுகின்றது.

அடிப்படை (BASIC)

G 6.3 மனநலம் மற்றும் தொழிலமைப்புடன் தொடர்புடைய ஆபத்துகள் உட்பட தொழில் சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

G 6.4 *அபாயகரமான வேலை*யுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பதற்காக, பாதுகாப்பாக வேலை செய்வதற்கான *நடைமுறைகள்* செயலாக்கப்படுகின்றன.

G 6.5 உபகரணங்கள் பாதுகாப்பானவை மற்றும் பாதுகாப்பான நிலைமைகளின் கீழ் பயன்படுத்தப்படுகின்றன. எச்சரிக்கை சின்னங்களும் பாதுகாப்புத் தகவலும் பார்க்கும்விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

G 6.6 வரிசையாக வேலை செய்வதற்காகவும் அடையாளங்காணப்பட்ட அபாயங்களுக்கு ஏற்பவும் பணியாளர்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் மற்றும் பாதுகாப்பு உடையைப் பயன்படுத்துகின்றனர், உடைகள் சுத்தமாகவும் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன.

G 6.7 தொழில்சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான *விபத்து*கள் மற்றும் நூலிழையில் பிழைப்பது ஆகியவை தெரிவிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படுகின்றன மற்றும் பின்தொடரப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. *விபத்து*கள் மற்றும் நூலிழையில் பிழைக்கும் சம்பவங்களின் பதிவுகள் வைத்துக்கொள்ளப்படுகின்றன.

G 6.8 பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கும் அபாயங்கள் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படுகின்றன மற்றும் பின்தொடரப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

## EMERGENCY MANAGEMENT

அடிப்படை (BASIC)

G 6.9 அவசரச்சூழல்களின் அபாயங்கள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. எழுத்துவடிவில் உள்ள அவசரச்சூழல் *நடைமுறைகள்* செயல்படுத்தப்படுகின்றன.

G 6.10 சார்பற்ற வெளியேற்ற அலாரமானது எல்லாப் பணியாளர்களுக்குக் கேட்கும் விதத்திலும் பார்க்கும் விதத்திலும் அமைந்திருக்கும். அலாரத்தை கைமுறையாகச் செயல்படுத்துவதும் சாத்தியமே மற்றும் அலார பொத்தான்கள் தெளிவாகப் பார்க்கும் விதத்திலும் குறிக்கப்பட்டும் இருக்கும்.

G 6.11 அவசர வெளியேற்ற வழிகளும் வெளியேற்றங்களும் எல்லா நேரமும் வேகமான பாதுகாப்பான வெளியேற்றத்தை உறுதிசெய்கின்றன.

G 6.12 தொழில்சார்ந்த ஆபத்துகளுடன் பொருந்தும் வகையில் முதலுதவி வழங்குவதற்காக பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன மற்றும் போதுமான எண்ணிக்கையில் எல்லா ஆப்ரேட்டிங் நேரத்திலும் தீயணைப்பு கிடைக்கின்றன.

G 6.13 முதலுதவி மற்றும் தீயணைப்பு உபகரணத்தின் வகை, எண்ணிக்கை மற்றும் இருப்பிடமானது தொழில்சார் அபாயங்களுக்குத் தகுந்ததாக உள்ளன. உபகரணத்தை எல்லா நேரமும் இயக்கக்கூடியதாக இருக்கும்.

G 6.14 வெளியேற்றச் செயல்முறையைச் சோதனை செய்து, ஏதேனும் மேம்பாடு தேவையா என அடையாளங்காண வெளியேற்ற டிரில்கள் இயக்கப்படுகின்றன. டிரில்களை இயக்கும் முறையானது தொழில்சார்ந்த ஆபத்துகள் பொறுத்து வரையறுக்கப்படுகின்றன. பெரும்பாலான பணியாளர்கள் முடிந்தளவு டிரில்களில் பங்கேற்கின்றனர். வெளியேற்ற டிரில்களின் பதிவுகள் வைத்துக்கொள்ளப்படுகின்றன

மேம்பட்டவை (ADVANCED)

G 6.15 அவசரநடைமுறைகளைச் சோதனை செய்து, ஏதேனும் மேம்பாடு தேவையா என அடையாளங்காண, வெளியேற்ற டிரில்கள் இயக்கப்படுகின்றன. அவசர டிரில்களின் பதிவுகள் வைத்துக்கொள்ளப்படுகின்றன.

G 6.16 அவசரநிலை சூழல் ஏற்படும் சமயங்களில் முடிவுகளை எடுப்பதற்காக, *அவசர நிலைக்குச் செயல்படும் குழு* ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 6.17 எழுதப்பட்ட அவசரநிலைக்கான *நடைமுறைகள்*, அருகிலுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கத்துக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

## வேதிப்பொருள் மேலாண்மை

அடிப்படை (BASIC)

G 6.18 பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு, மேலும் சுற்றுச்சூழலைக் காக்கும் முறையில் வேதிப்பொருட்கள் வாங்கப்படுகின்றன, சேமிக்கப்படுகின்றன, எடுத்துவரப்படுகின்றன/எடுத்துசெல்லப்படுகின்றன, கையாளப்படுகின்றன மற்றும் பயன்படுத்தப்படுகின்றன.

மேம்பட்டவை (ADVANCED)

G 6.19 UN குளோபல் ஹார்மோனிஸிங் சிஸ்டத்தின்படி வேதிப்பொருள் அபாயங்கள் மதிப்பாய்வுசெய்யப்பட்டு, அதற்கேற்ப வேதிப்பொருட்கள் லேபிலிடப்படுகின்றன.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 6.20 பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு, மேலும் சுற்றுச்சூழலுக்குச் சிறிதளவே தீங்குவிளைவிக்கும் மாற்று வேதிப்பொருட்கள் அடையாளங்காணப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன.

## கட்டடம் மற்றும் மின்சாரம் தொடர்பான பாதுகாப்பு

அடிப்படை (BASIC)

G 6.21 கட்டட அமைப்பின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டு, கட்டப்படுகின்றன, பராமரிக்கப்படுகின்றன மற்றும் மாற்றம் செய்யப்படுகின்றன.

G 6.22 மின்சார வயர்கள், மின்விளக்குகள் மற்றும் எரிவாயு பொருத்திகள் முறையாக பொருத்தப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன.

## தொழில்சார்ந்த உடல்நலப் பரிசோதனைகள் மற்றும் ஹெல்த்கேர் ஆதரவு

அடிப்படை (BASIC)

G 6.23 கர்ப்பம் அல்லது HIV போன்றவற்றுக்காக பணி சாராத உடல்நலப் பரிசோதனை பயன்படுத்தப்படாது.

மேம்பட்டவை (ADVANCED)

G 6.24 பணியினால் உடல்நலத்தில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுகிறதா என்பதை அடையாளங்காண, தொழில்சார்ந்த உடல்நலப் பரிசோதனைகளுக்கு பணியாளர்கள் தொடர்ந்து உட்படுத்தப்படுகின்றனர். உடல்நலப் பரிசோதனைகள், ஹெல்த்கேர் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. பணி செய்யும் இடம் அல்லது பணியிடத்தில் சாத்தியமான சீரமைப்புகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குவதற்காக, கிடைக்கும் முடிவுகள் ஹெல்த்கேர் நிபுணரால் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 6.25 பொருந்தும் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்ட நலன்களுடன் சேர்த்து, பணியாளர்கள் ஹெல்த்கேர் ஆதரவையும் பெறுகின்றனர்.



# 7 வேலைசெய்தல் மற்றும் வாழ்விற்கான பிற சூழ்நிலைகள் பொருத்தமாக உள்ளன

## வேலைசெய்வதற்கான சூழல்கள்

அடிப்படை (BASIC)

G 7.1 வேலைசெய்தல் சூழலானது சுத்தமாகவும், சுகாதாரமாகவும், நன்றாக பராமரிக்கப்பட்டும் உள்ளது, மேலும் போதுமான ஒளி, காற்றோட்டம் மற்றும் தேவைப்படும் நேரத்தில் வெப்ப மூட்டல் வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

G 7.2 பணியாளர்களுக்கு உணவருந்துவதற்கும் ஓய்வெடுப்பதற்கும் இடங்கள் உள்ளன, அங்கு எந்தவித அபாயமும் ஏற்படாது மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளன.

G 7.3 கழிப்பறைகளைப் பணியாளர்கள் இலவசமாகப் பயன்படுத்துவதற்கு உள்ளன, மேலும் அவை சுத்தமாகவும், பணி நேரத்தின் போது பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ளன, அடிப்படை கருவிகள் கழிப்பறைகளில் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் பணியாளர்களின்எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளன.

G 7.4 சுத்தமான குடிநீர் இலவசமாக வழங்கப்படுகின்றது, மேலும் எவ்வளவு வேண்டுமானாலும் வரம்பில்லாமல் அருந்தலாம் மற்றும் பணிசெய்யும் இடத்திலிருந்து அருகிலேயே குடிநீர் வசதி உள்ளது.

# 8 பூமி பாதுகாக்கப்படுகிறது

## சுற்றுச்சூழல்சார்ந்த பாதிப்புகள்

கண்டிப்பாகப் பின்பற்றுதல் (MUST)

G 8.1 தீவிரச் சுற்றுச்சூழல் மாசுபாடு இல்லை. ஏதேனும் தீவிரச் சுற்றுச்சூழல் மாசுபாடு இருக்கும்பட்சத்தில், அது உடனடியாக IKEA (ஐக்கியா)விடம் தெரிவிக்கப்படும்.

அடிப்படை (BASIC)

G 8.2 சுற்றுச்சூழல் தொடர்பான புகார்கள் பதிவுசெய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

G 8.3 தற்போதைய அல்லது முந்தைய செயல்பாடுகளின் காரணமாக நில மாசுபாட்டிற்கான அபாயமானது மதிப்பாய்வு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

G 8.4 சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறியும் பொருட்டு, சுற்றுச்சூழல் தொடர்பான அபாயங்கள் மற்றும் பாதிப்புகள் அடையாளங்காணப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன, மீண்டும் சரிபார்க்கப்படுகின்றன மற்றும் 12 மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றன.

மேம்பட்டவை (ADVANCED)

G 8.5 செயல்பாடு மற்றும் அமைப்புசார்ந்த மாற்றங்களை மதிப்பிடும்போது சுற்றுச்சூழல் பாதிப்புகளும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

## காற்று மாசுபாடு மற்றும் காலநிலை

அடிப்படை (BASIC)

G 8.6 தற்போதைய ஆற்றல் மூலங்கள் தெரிந்தவையாகும், *புதுப்பிக்கத்தக்க ஆற்றல்* மூலங்களாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் அடையாளங்காணப்படுகின்றன.

மேம்பட்டவை (ADVANCED)

G 8.7 உருவாக்கப்படுகின்ற அல்லது வாங்கி பயன்படுத்தப்படும் எல்லா மின்சாரமும் *புதுப்பிக்கத்தக்க ஆற்றல்* மூலங்களிலிருந்து பெறுபவையாகும்.

G 8.8 *ஓசோனை மாசுபடுத்தும் பொருட்கள்* அல்லது ஹைஹைர்டோஃபுளோரோகார்பன்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

G 8.9 நிலக்கரிகள் அல்லது எண்ணெய் அடிப்படையிலான எரிபொருட்கள், தளத்தில் முதன்மை எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 8.10 2°C க்குக் கீழ் பூமியின் வெப்பத்தைக் குறைக்க மற்றும் நூற்றாண்டின் இறுதியில் 1.5°C குறைக்கும் நோக்கத்திற்காக (பாரீஸ் ஒப்பந்தத்தில் அமைக்கப்பட்டுள்ளதுபோல்) காற்று மாசுபடுத்திகளின் உமிழ்வுகள் மற்றும் *பசுமைஇல்ல வாயுக்கள்* ஆகியவை குறைக்கப்பட்டுள்ளன.

G 8.11 உருவாக்கப்படுகின்ற அல்லது வாங்கி பயன்படுத்தப்படும் எல்லா ஆற்றலும் *புதுப்பிக்கத்தக்க ஆற்றல்* மூலங்களிலிருந்து பெறுபவையாகும்.

## வளம்பாதுகாத்தல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம்

அடிப்படை (BASIC)

G 8.12 IKEA (ஐக்கியாவால்) அங்கீகரிக்கப்பட்ட முறைமையின்படி சான்றளிக்கப்பட்ட பகுதியாக இருக்கும்பட்சம் தவிர்த்து, அதிக வளம் கொண்ட காக்கப்பட வேண்டிய பகுதிகளில் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

மேம்பட்டவை (ADVANCED)

G 8.13 பல்லுயிர்ப் பெருக்கத்தை ஆதரிப்பதற்கான முயற்சிகள் செயலாக்கப்படுகின்றன.



# 9 நீர் மற்றும் கழிவுகள் உள்ளிட்ட வளங்கள் தக்கவைக்கக் கூடிய மற்றும் சுழற்சி முறையில் நிர்வகிக்கப்படுகின்றன

## தண்ணீர்

**அடிப்படை (BASIC)**

G 9.1 எந்த வகையான தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது மற்றும் எப்படி, எங்கு, யாரால் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது என்பது குறித்த தகவல்கள் கிடைக்கின்றன.

**மேம்பட்டவை (ADVANCED)**

G 9.2 தண்ணீரானது பணி செயல்பாடுகளில் பயன்படுத்தப்பட்டால், தண்ணீரைப் பயன்படுத்துவதைக் குறைத்தல் மற்றும் தண்ணீர் வெளியேற்றுதலுக்கான வாய்ப்புகள் அடையாளங்காணப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

**மிகச்சிறந்தவை (EXCELLENT)**

G 9.3 தண்ணீரானது பணி செயல்பாடுகளில் பயன்படுத்தப்பட்டால், *உயர் தரமான தண்ணீர்* பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கானச் சாத்தியங்கள் அடையாளம் காணப்படுகின்றன. *உயர் தரமான தண்ணீர்* பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நல்லதொரு முடிவுகளைத் தருகின்றன.

## கழிவு மேலாண்மை

அடிப்படை (BASIC)

G 9.4 பணியாளர்களின் ஆரோக்கியம் & பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் கழிவு சேகரிக்கப்படுகிறது, கையாளப்படுகிறது, எடுத்துச்செல்லப்படுகிறது மற்றும் அகற்றப்படுகிறது. எந்தக் கழிவுகளும் பூமியில் புதைக்கப்படுவதில்லை. அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற கழிவுகள் தனித்தனியாக வைக்கப்படுகின்றனர்.

G 9.5 மீட்டெடுக்கும் நோக்கத்திற்காகத் தவிர, கழிவானது தளத்தில் எரிக்கப்படுவதில்லை.

G 9.6 கழிவு எப்படி, எங்கு, எவ்வளவு மற்றும் யாரால் கையாளப்படுகின்றது என்பது குறித்த பதிவுகள் கிடைக்கின்றன.

G 9.7 கழிவை அப்புறப்படுத்துதல், குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளைக் கண்டறியப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

மேம்பட்டவை (ADVANCED)

G 9.8 எந்தக் கழிவும் நிலப்பகுதியில் புதைக்கப்படுவதில்லை.

மிகச்சிறந்தவை (EXCELLENT)

G 9.9 அனைத்து கழிவும் மறுபயன்பாடோ அல்லது மறுசுழற்சியோ செய்யப்படும்.



# பொருள் விளக்கம்

***விபத்து***

எதிர்பாராவிதமாகவும் உள்நோக்கமின்றியும் நடக்கும் நிகழ்வு அல்லது சம்பவம், இதன் விளைவாக காயம், உடல்நலக் குறைபாடு அல்லது மரணம் நேரிடும்.

***அடிப்படை இடம்***

வேலை ஒப்பந்தத்தில் விளக்கப்பட்ட இடம். இது வழக்கமான பணியிடமாகவோ அலுவலகமாகவோ இருக்கும், இது ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

***வணிக அறநெறி***

வணிகம் செய்யும்போது நெறிமுறையாக எது சரி எது தவறு என்பதை முடிவுசெய்யும் விதிகள், கொள்கைகள் மற்றும் தரநிலைகள்.

***குழந்தைகள்***

18 வயதுக்குட்பட்ட நபர்கள்,தவிர குழந்தைக்கு பொருந்தக்கூடிய விதியின் கீழ், பெரும்பான்மையானோர் முன்னரே அடைந்தனர்.

***குழந்தை தொழிலாளி***

குறைந்தபட்ச சட்டபூர்வமாக வேலை செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட வயதின் கீழ் உள்ள குழந்தைகளிடம் வேலை வாங்குவது, இது அவர்களின் குழந்தைப்பருவம், ஆற்றல் வளம் மற்றும் பெருந்தன்மையைப் பறிக்கிறது, மேலும் இது அவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும், வேலையின் வகை மற்றும் *வேலை நேரம்* மற்றும் எந்த நிலைகளின் கீழ் வேலை செய்யப்படுகின்றது என்பதைப் பொருத்து18 வயதுக்கு கீழ் வேலை செய்யும் எவரும் "*குழந்தை தொழிலாளி*" எனக் கருதப்படுவர்.

***பொதுக்கூட்டுப்பேரம்***

முதலாளி மற்றும் தொழிலாளி பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை ஆகும், இது சுதந்திரமாகவும் மற்றும் தொழிலாளர்களால் தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் நடைபெறும்.

***பாகுபாடு***

*பாகுபாடு* என்பது வேலையைச் செய்வதற்கான திறனுடன் தொடர்பில்லாத விஷயங்களில் ஒருவரை மற்றவருடன் ஒப்பிட்டு குறைத்து மதிப்பிட்டு நடத்துவது.

பாகுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு: வயது, பாலினம்,பாலின நாட்டம், மனகுறை அல்லது உடற்குறை, இனம், தேசியம், மதம், திருமணம் அல்லது குடும்ப நிலை அல்லது வேலையைச் செய்வதற்கான அவர்களின் திறனுடன் தொடர்பு இல்லாத ஒரு நபரின் அடையாளத்தின் வேறு எந்தவொரு பரிமாணமும்.

***பணிநீக்கம்***

ஒழுங்கு நடவடிக்கையின் தீர்ப்பை *பணியாளர்* ஒப்புக்கொண்ட நிலை அல்லது எதிர்த்து மேல்முறையீடு செய்யாத நிலை அல்லது அதிகாரிகளால் உறுதிசெய்யப்பட்ட நிலை தவிர்த்து, ஒரு முதலாளி அதிகாரப்பூர்வமாக ஒருவரை எந்தக் காரணத்திற்காகவும் வேலையை விட்டு வெளியேற்றும் சூழல். இதில் வேலையிலிருந்து பணியாளர்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது அல்லது தேவைக்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறைப்பது ஆகியவை அடங்கும்.

***பன்முகத்தன்மை***

*பன்முகத்தன்மை* என்பது வயது, பாலின அடையாளம், பாலின நாட்டம், மனகுறை அல்லது உடற்குறை, இனம், தேசியம், மதம், திருமணம் அல்லது குடும்ப நிலை அல்லது ஒரு நபரின் அடையாளத்தின் வேறு எந்தவொரு பரிமாணமும் உட்பட மக்களிடையான பல்வேறு ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் குறிக்கிறது.

***அவசரசூழல் வெளியேற்றம்***

*அவசரசூழல் வெளியேற்றம்* என்பது ஒளிரும் புகைப்பட அடையாளடத்துடன் ஒளிர்வது அல்லது குறிக்கப்படுவது. அவசரசூழலில் வெளியே செல்வதற்கான பாதையாகும், இது மூடப்படாமல் திறந்து வைக்கப்பட்டிருக்கும்
அத்துடன் எல்லா நேரங்களிலும் பயன்படுத்துவதற்கு இருக்கும்.

***அவசர நிலைக்குச் செயல்படும் குழு***

பின்வரும் அவசர நிலை தீர்வை ஒருங்கிணைப்பதற்குப் பொருத்தமான தகுதியுடைய பணியாளர்கள் குழு: அவசரநிலையை மதிப்பிடுதல், உடனடி முடிவு எடுத்தல், ஊள்ளூர் அதிகாரிகளுக்கும் அவசரநிலை சேவைகளுக்கும் ஆதரவு அளித்தல், உட்புற மற்றும் வெளிப்புறத் தகவல்தொடர்புகள்.

***அவசர வழி***

அவசர வெளியேற்றத்தை நோக்கி செல்லும் பாதை. இந்த பாதையானது எல்லா நேரங்களிலும் மூடப்படாமல் வைக்கப்பட்டுருக்கும்.

***சமத்துவம்***

*சமத்துவம்* என்பது பணியாளர்களின் பின்னணி மற்றும் தனிப்பட்ட வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல், அனைவரையும் சமமாக நடத்தி, சம வாய்ப்புகளை அளிப்பது. *சமத்துவம்* என்பது எந்த விதமான *பாகுபாடு* இல்லாததையும் குறிக்கிறது.

***விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல், கொத்தடிமை அல்லது சிறைத்தொழிலாளர்களின்***

கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல் என்பது அச்சுறுத்தல் அல்லது அபராத தண்டனையின் கீழ் ஒருவரை ஏதேனும் பணி அல்லது பணிசார்ந்த சேவை செய்யும்படி கட்டாயப்படுத்துவது, உழைப்பு இதில் அந்த நபர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் வேலைசெய்ய மாட்டார். தனிப்பட்ட உடைமைகளைப் பறிமுதல் செய்தல், எந்த நேரத்திலும் வேலையிலிருந்து வெளியேற முடியாத நிலை மற்றும் வேலைவளாகத்தை விட்டு வெளியேற இயலாமை போன்றவையும் அடங்கும்.

கொத்தடிமை என்பது ஒரு வகையான கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல் வகையாகும், இதில் பணியாளர்கள் கடன் பத்திரத்தின் மூலம் வேலைக்கு இணங்குகிறார்கள், அதாவது அவர்களிடம் பணம் வசூலிக்கப்படுதல், நேரடியாகவோ மறைமுகமாகவோ, ஆள்*சேர்ப்பு* கட்டணம் அல்லது செலவுகள், வைப்புத்தொகை செலுத்துதல், கடன்களைப் பெறுதல் அல்லது ஊதிய முன்பணம் அல்லது சம்பளம் செலுத்துவதில் தாமதம் போன்றவை அடங்கும்.

சிறைத்தொழிலாளர்களின் உழைப்பு என்பது சிறைத்தொழிலாளர்களைக் கொண்டு வேலை வாங்குதலாகும்.

***அடிப்படை தொழிலாளர் உரிமைகள்***

IWAY (ஐவே) இன் நோக்கத்திற்காக, *அடிப்படை தொழிலாளர் உரிமைகள்* என்பதில் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல், கொத்தடிமை இல்லா நிலை, -*பாகுபாடு* இல்லா நிலை, சங்கத்தின் சுகந்திரம் மற்றும் பொதுக்கூட்டுப்பேரத்திற்கான உரிமைகள் ஆகியவை அடங்கும்.

***பாலின சமநிலை***

*பாலின சமநிலை* என்பது ஆண்கள் மற்றும் பெண்களைச் சமமாக நடத்தும் விதத்தைக் குறிக்கிறது.

***பசுமைஇல்ல வாயுக்கள்***

கியோட்டோ நெறிமுறையில் வரையறுக்கப்பட்டு உள்ள பின்வரும் ஏழு பசுமைஇல்ல வாயுக்களின் உமிழ்வானது காலநிலை மாற்றத்தில் பங்களிக்கின்றன: கார்பன்-டை-ஆக்சைடு ($CO_2$), மீத்தேன் ($CH_4$), நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$), சல்பர் ஹெக்சாஃப்ளூரைடு ($SF_6$), *ஹைட்ரோப்ளூரோகார்பன்ஸ்* (HFCs), நைட்ரஜன் ட்ரைஃப்ளூரைடு ($NF_3$) மற்றும் பெர்ப்ளூரோகார்பன்ஸ் (PFCs). இந்த வாயுக்கள் பசுமை இல்லம் போன்று சூரியனில் இருந்து வெப்பத்தை உறிஞ்சுவதன் மூலம், புவி வெப்பமயமாதலை அதிகரிக்கின்றன, எனவே இது பசுமையில்ல விளைவு என அழைக்கப்படுகின்றது.

***அபாயம்***

வாழ்க்கை, உடல்நலம் அல்லது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு சூழ்நிலை. இதில் இயற்பியல், வேதியியல், உயிரியல், பணிச்சுழலியல் அல்லது தொழில்முறைசார்ந்த அபாயங்கள் அடங்கலாம்.

***அபாயகரமான வேலை***

தொழிலாளர்களுக்கு அபாய நிகழ்வுகள் நேரிடலாம் என சந்தேகிக்கப்படும் வேலை.

***அதிக வளம் கொண்ட காக்கப்பட வேண்டிய பகுதிகள்***

தேசம், வட்டாரம் அல்லது உலக நிலையில் மிகவும் குறிப்பிட்ட அல்லது அதிக முக்கியத்துவம் வாய்ந்த உயிரியல், சுற்றுச்சூழல், சமூகம் அல்லது கலாச்சார மதிப்புகளைக் கொண்டவை அதிக பாதுகாப்பான மதிப்புடைய வளத்தின் அமைப்புகளைக் கொண்ட பகுதியாக வரையறுக்கப்படுகின்றது.

***உயர் தரமான தண்ணீர்***

இயற்பியல், வேதியியல், உயிரியல் பண்புகளுக்கு பொருந்துகின்ற அல்லது குடிநீர் வரம்புகளைக் கிட்டத்தட்ட பூர்த்திசெய்யும் தண்ணீர்.

***ஹைட்ரோப்ளூரோகார்பன்***

*ஹைட்ரோப்ளூரோகார்பன்* (HFCs) என்பது மனிதனால் உருவாக்கப்பட்டவை, ஃப்ளூரைனேடேட் *பசுமைஇல்ல வாயுக்கள்*. குளிர்சாதன வசதி, குளிர்பதனம், நுரை-ஊதுதல், தீத்தடுப்பான்கள், கரைப்பான்கள் மற்றும் தூசிபடலங்கள் ஆகியவற்றில் ஓசோனில் மாசு ஏற்படுத்தும் பொருட்களுக்கு மாற்றாக இவை அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

***சேர்ப்பு***

*சேர்ப்பு* என்பது நியாயமான, ஆரோக்கியமான, மற்றும் அதிக செயல்திறன் கொண்ட அமைப்பையோ சமூகத்தையோ உருவாக்குவதற்காக, *பன்முகத்தன்மையைப்* பயன்படுத்துவது. அனைவரும் அடங்கிய சூழ்நிலையானது வளங்களைச் சமமாக கையாளுதல் மற்றும் அனைவருக்குமான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது. இதில் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள், மரியாதையாக நடத்தப்படுகிறார்கள், தொழிலில் முழுமனதுடன் ஈடுபடுகிறார்கள், ஊக்கப்படுத்தப்படுகிறார்கள் மற்றும் மதிப்பு மிக்கவர்களாக நடத்தப்படுகிறார்கள் என உணர வேண்டும், அவர்கள் யார் என்பதையும், நிறுவனம் மற்றும் சமூக இலக்குகளுக்கான அவர்களின் பங்களிப்பு என்ன என்பதையும் விளக்குகிறது.

***வாழ்க்கைச் செலவுகள்***

பின்வருவது போன்ற வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுடன் தொடர்புடைய செலவுகள், உணவு, பானம், தங்குமிடம் மற்றும் ஆடை. உடல்நலக்குறைவை உடனடியாக ஏற்படுத்தும்.

***குறைந்தபட்ச சட்டபூர்வ வேலை வயது***

*குறைந்தபட்ச சட்டபூர்வ வேலை வயது* தேசியச் துணை-ஒப்பந்தத்தாரர் *துணை-ஒப்பந்தத்தாரர் என்பது*

***நூலிழையில் தப்பிப்பது***

*நூலிழையில் தப்பிப்பது* ஒரு திட்டமிடாத நிகழ்வாகும், அதனால் காயமோ உடல்நலக் குறைவோ ஏற்பட்டிருக்காது, ஆனால் அது ஏற்படுவதற்குச் சாத்தியம் இருந்திருக்கும். நிகழ்வுகளின் சங்கிலியில் அதிர்ஷ்டம் மட்டுமே காயம் அல்லது நோயைத் தடுக்கும்.

***அறிவிப்பு காலம்***

பணிநீக்க அறிவிப்புக்கும் இறுதி வேலைநாளுக்கும் இடையேயான காலம் ஆகும். அறிவிப்பு கால ஊதியமானது பணியாளர்களின்ஒப்பந்தத்திற்கு இணங்கச் செலுத்தப்படுகிறது.

***ஓசோனை மாசுபடுத்தும் பொருட்கள்***

மேல் வளிமண்டலத்தில் உள்ள பூமியின் பாதுகாப்பு ஓசோன் அடுக்கில் மாசு ஏற்படுத்தும் வேதிப்பொருட்கள். அவற்றில் குளோரோப்ளூரோகார்பன் (CFCs), ஹைட்ரோ குளோரோப்ளூரோகார்பன் (HCFCs), ஆலோன்களும் அடங்கும், இவை மனிதன் உருவாக்கிய வேதிப்பொருட்களில் ஓசோன் மாசுபடுதலுக்குக் காரணமாக இருப்பவை. மாண்ட்ரீல் நெறிமுறைக்கேற்ப ஓசோனை மாசுபடுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்படுகிறது.

***பாரீஸ் ஒப்பந்தம்***

2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில், காலநிலை மாற்றம், பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் குறைப்பு, தழுவல் மற்றும் நிதி ஆகியவற்றை கையாதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்புச் சாசனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம்.

***ஊதியச்சீட்டு***

ஒவ்வொரு ஊதியக் காலத்தின் முடிவிலும் பணியாளருக்குவழங்கப்படும் நேரடி அல்லது மின்னணு குறிப்பு, இதில் ஈடுசெய்தலுக்கான கூறுகள் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கும். ஊதியம், பலன்கள், ஊக்கத்தொகை/போனஸ் மற்றும் ஏதேனும் ஊதியக் குறைப்புகளுக்கான துல்லியத் தொகையும் இதில் அடங்கும்.

***புதுப்பிக்கத்தக்க ஆற்றல்***

புதுப்பிக்கத்தக்க தொல்படிவம் அல்லாத ஆற்றல் மூலங்களிலிருந்து வரும் அனைத்து ஆற்றல் மூலங்களும், அவை இயற்கையாகவே மனிதர்களின் கால அளவீட்டின்போது புதுப்பித்துக்கொள்கின்றன. *புதுப்பிக்கத்தக்க ஆற்றல்* என்பதில் பின்வரும் ஆற்றல் மூலங்கள் அடங்கும்: காற்று, சூரிய ஒளி, நீர் சக்தி, உயிரிய எரிபொருட்கள், வெப்பநீராற்றல் மற்றும் கடல் (அலை மற்றும் அலைசார்ந்தது) மற்றும் புவிவெப்ப ஆற்றல். இதில் அணுஆற்றலோ தொல்படிவ எரிபொருட்களோ அடங்காது.

***நடைமுறைகள்***

ஒரு பணியை நிறைவேற்ற வடிவமைக்கப்பட்டுள்ள செயல்களின் தொகுப்பு. குறிப்பிடப்படாவிட்டால், *நடைமுறைகள்* எழுத்துவடிவில் இல்லாமல் இருக்கலாம்.

***கடுமையான சுற்றுச்சூழல் அல்லது மாசுபாடு***

சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமாக மீளாமுடியாத, நீண்டகால பரவலான சூழலமைப்பு சீர்குலைவு அல்லது தளத்திலிருந்து அதிகமாக பரவும் வாய்ப்புள்ளது.

***தீவிர தொழில்சார்ந்த உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அபாயங்கள்***
ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் உடனடியாக மரணம், நிரந்தர காயம் அல்லது உடல்நலக்குறைவை உடனடியாக ஏற்படுத்தும்

***துணை-ஒப்பந்தத்தாரர் என்பது***
IKEA (ஐக்கியா) வேல்யூ செயினின் பகுதியாக மெட்டீரியல் அல்லது துணைக்கருவி, தயாரிப்பு, சேவை ஆகியவற்றை வழங்கும் ஏதேனும் நிறுவனம் அல்லது தனிநபர்.

***சப்ளையர்***
பொருட்கள், சேவைகள், மெட்டீரியல்கள் அல்லது கூறுகள் ஆகியவற்றை வழங்குவதற்காக IKEA (ஐக்கியா) நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு மற்றும் எந்தவொரு துணை-ஒப்பந்தக்காரர்களும் இந்த ஆவணத்தின் நோக்கத்திற்காக, *சப்ளையர்*( எனும் வார்த்தையானது *சப்ளையர்*கள், சேவை வழங்குபவர்கள் மற்றும் மற்ற ஒப்பந்த தரப்பினர்களுக்கும் பொருந்தும்.

***தற்காலிக வேலை***
வரையறுக்கப்பட்ட கால அளவில் வேலை. ஒப்பந்தத்தின் முடிவுக்காலமானது நோக்கம் சார்ந்த நிபந்தனைகளால் தீர்மானிக்கப்படுகிறது, எ.கா. ஒரு குறிப்பிட்ட தேதி, ஒரு குறிப்பிட்ட பணியை முடிப்பது அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடப்பது. *தற்காலிக வேலை*யானதுமுழு நேரமாகவோ பகுதி நேரமாகவோ இருக்கலாம் மற்றும் இருதரப்பாகவோ (இரு தரப்பினர்களுக்கு இடையே) அல்லது முத்தரப்பாகவோ (மூன்று தரப்பினர்களுக்கு இடையே) இருக்கலாம்.

***வேல்யூ செயின்***
ஒரு தயாரிப்போ அல்லது சேவையோ அதன் தொடக்கத்திலிருந்து இறுதியில் நுகர்வோர் வரை கொண்டு சேர்ப்பதற்கு தேவைப்படும் முழுச் செயல்பாடுகள் மற்றும் மீண்டும் ஒருங்கிணைத்தலும் வேல்யூ செயினில் அடங்கும்]. வடிவமைப்பு, உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வோருக்கான ஆதரவு போன்ற செயல்பாடுகளும் இதில் அடங்கும். வேல்யூ செயினின் ஒவ்வொரு கட்டத்திலும், பங்குதாரர்கள், தயாரிப்பு அல்லது சேவையில் மதிப்பைக் கூட்டி, இறுதிப் பொருளின் மதிப்பை உயர்த்துகின்றனர்.

***தொழில்பயிற்சி***
கற்றல் நோக்கத்திற்கான அனைத்து வகையான பயற்சிபருவம், உள்ளிருப்பு பயற்சி மற்றும் வேலை அனுபவம் ஆகியவை அடங்கும் *தொழில்பயிற்சி*யானது ஒரு உள்ளூர் பள்ளி அல்லது பயற்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகிறது அல்லது திறமையான அதிகாரியால் பயிற்சி திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது அல்லது ஒரு வழிகாட்டி போல் செயல்படுகிறது அல்லது பயிற்சி பெறுபவரின் தொழில் அல்லது பயிற்சியின் வரிசையைத் தேர்ந்தெடுத்தலை ஆதரிப்பதற்காக அறிமுகத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

***பணியாளர்***
முழுநேரமாகவோ பகுதிநேரமாகவோ வேலை செய்பவர். இதில் யூனிட் அடிப்படையிலான ஊதியம் பெறும் பணியாளர்கள், தொழில்சார்ந்த பயிற்சிபெறுபவர்கள், தகுதிகாண் காலத்தில் இருக்கும் பணியாளர்கள், தளத்தில் ஒரு வாரத்திற்கு பதினெட்டு (18) மணிநேரம் வேலைசெய்யும் துணை ஒப்பந்ததாரர் பணியாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

***வேலை நேரம்***
ஒரு *பணியாளர்* வேலை செய்யும் கால அளவு. ஊதியம் கிடைக்கும் வருடாந்திர விடுப்பு, ஊதியம் கிடைக்கும் பொது விடுமுறைகள், ஊதியம் கிடைக்கும் நோய்வாய் விடுப்பு, உணவு இடைவெளி, வீட்டிலிருந்து வேலைக்கு செல்லும் நேரம் மற்றும் வேலையிலிருந்து வீட்டிற்குச் செல்லும் நேரம் போன்றவற்றிற்கு ஊதியம் செலுத்தப்பட்டாலும், அவை வேலைசெய்யப்படாத கால அளவில் சேர்க்கப்படுவதில்லை.

***இளம் தொழிலாளி***
18 வயதிக்கு கீழ் உள்ள நபர்கள், ஆனால் குறைந்தபட்ச சட்டபூர்வ வேலை செய்யும் வயதுக்கு மேல் இருக்கும் வேலையில் ஈடுபட்டவர்கள்.

***ஜீரோ-அவர் ஒப்பந்தம்***
இந்த வேலைவாய்ப்பு ஒப்பந்தமானது, வழக்கமான வேலையைத் பணியாளருக்கு வழங்க முதலாளியைக் கட்டாயப்படுத்தாது, ஆனால் வேலை கிடைக்கும்போது *பணியாளர்* தயாராக இருக்க வேண்டும்.



<உள்ளடக்கத்திற்குத் திரும்பவும்

**IWAY (ஐவே) STANDARD - EDITION 6.0 PUBLISHED SEPTEMBER 2019 - © Inter IKEA Systems B.V. 2019 (இன்டர் ஐக்கியா சிஸ்டம்ஸ் பி.வி. 2019)**